**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

Calendar .
Miscellaneous CC 345 / 2018
Preliminary Register :
Sessions Prosecution witness PW - 9

Name : ஜீவநாத் த/பெ. சண்முகம் Calling :
Village : Taluk :
Caste : Religion :
Age : 35/2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of
the day of 04.12.2021

**மு.வி**

நான் தற்சமயம் திண்டுக்கல் கரூர்வைசியா வங்கி கிளையில் பிராஞ்ச் ஆபரரேசன் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 - 2018ல் எங்களது வங்கியில் மேனேஜராக திரு.லோகேஷ் பணிபுரிந்தார் அவரது கையொப்பம் மற்றும் பணி நிலை எனக்கு நன்கு தெரியும். கடந்த 06.11.2017 அன்று மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளரிடமிருந்து வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண். 26/2017 வழக்கில் சம்மந்தப்பட்ட கரூர்வைசியா வங்கி கணக்கு எண். 1121172000003110 எங்களது வங்கி கணக்கில் இயங்கப்பட்ட பெயர் மற்றும் விலாசம், பணப்பரிமாற்ற விபரம் மற்றும் கரூர்வைசியா வங்கி கணக்கு எண். 112111521193 என்ற கணக்கு யார் பெயரில் உள்ளது எந்த விலாசம் என்றும் மற்றும் KVB வங்கி கணக்கு எண். 1797115000001040 என்ற வங்கி கணக்கு யாருடைய பெயரில் எந்த விலாசத்தில் உள்ளது என்றும் வங்கி கணக்கு 1121172000003110 வங்கி கணக்கில் உள்ள பணப்பரிமாற்றம் 01.05.2016 முதல் 30.05.2016 வரை மற்றும் வங்கி கணக்கு எண். 1797115000001040 பணப்பறிமாற்றம் 01.01.2017 முதல் 30.01.2017 வரை 112111521193 என்ற கணக்கு 01.06.2016 முதல் 30.08.2016 வரை உள்ள பணப்பறிமாற்றங்கள் உள்ள விபரம் கேட்டு வந்த கேட்பு மனுவிற்கு எங்களது வங்கி Account Statement ஐ பார்வையிட்டதில் 1121172000003110 கணக்கானது K.A.M. ரகுமான் பெயரில் சேமிப்பு வங்கி கணக்காக 82/c 13 அருள்முருகன் நகர், போத்தனூார், கோயமுத்துார், 641023 என்ற முகவரியைச் சேர்ந்ததாகும். 01.05.2016 முதல் 31.05.2016 வரைக்கான பணப்பறிமாற்றம் தொடர்பான அறிக்கையினை 1 முதல் 5 பக்கங்கள் வரை சான்று பொருளிட்டு அனுப்பினேன். அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வங்கி கணக்கு எண். 1797115000001040 கணக்கு எண் நடப்பு கணக்கு ஆகும். வங்கி கணக்கின் பெயர் அம்மா எக்ஸ்பிரஸ் ஆகும். முகவரி 82c 11 1st cross street, அருள்முருகன் நகர், போத்தனூார், கோயமுத்துார் என்ற முகவரியினை கொண்டதாகும். 01.01.2017 முதல் 31.01.2017 வரை பணப்பறிமாற்ற வங்கி அறிக்கை 1 முதல் 3 பக்கங்கள் வரை சான்று பொருளிட்டு அனுப்பினேன். அது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வங்கி கணக்கு எண். 112111521193 நடப்பு கணக்கு எண் ஆகும். மலரும் வேளாண்மை என்ற பெயரில் விவசாய மாதாந்திர இதழ்

82/c 11, 1st **Cross Street**, அருள் முருகன் நகர், போத்தனுார், கோயமுத்துார் 641023 என்ற முகவரியைச் சேர்ந்தது ஆகும். 01.06.2016 முதல் 31.08.2016 வரை உள்ள பணப்பறிமாற்ற வங்கி அறிக்கை வங்கி முத்திரையுடன் 1 முதல் 7 பக்கங்கள் பொருளிட்டு அனுப்பினேன். அது **அ.சா.ஆ.**6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து மேலாளர் கரூர் வைசியா வங்கிக்கு அனுப்பப்பட்ட கோரிக்கை மனு **அ.சா.ஆ.**7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. KVB வங்கியிலிருந்து குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளருக்கு மேற்படி 3 வங்கி கணக்குகள் பற்றி அறிக்கையுடன் அனுப்பப்பட்ட வங்கி அறிக்கை **அ.சா.ஆ.**8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் வழக்கு தொடர்பான ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் குற்றப்பிரிவு போலீசார் விசாரணைக்காக கேட்டுக்கொண்டதன் பேரில் எங்களது வங்கி அலுவலகத்தின் மூலம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க பரிந்துரைக்கப்பட்ட கடிதம் **அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி</u>**

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் கு.வி இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her as true and correct.

Sd. K. Karthik

Judicial Magistrate No:II (FAC)
Dindigul

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

Calendar .
Miscellaneous CC 345 / 2018
Preliminary Register :
Sessions Prosecution witness PW - 10

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பார்த்திபன் த/பெ. சீனிவாசன் | Calling | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Age | : 32/2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2021

**மு.வி**

நான் தற்சமயம் திண்டுக்கல் SBI வங்கி கிளையில் தலைமை மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015 - 2017ல் எங்களது வங்கியில் மேனேஜராக தலைமை மேனேஜராக திரு. ராஜேஷ்வர் என்பவர் பணிபுரிந்தார். அவரது கையொப்பம் மற்றும் பணி நிலை எனக்கு நன்கு தெரியும். கடந்த 06.11.2017 தேதியிடப்பட்ட மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளரிடமிருந்து வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண்.26/2017 வழக்கில் சம்மந்தப்பட்ட SBI, திண்டுக்கல் கிளை வங்கி கணக்கு எண். 33556308213 மேற்படி வங்கி கணக்கு யாருடைய பெயரில் எந்த விலாசத்தில் உள்ளது என்றும், மேற்படி வங்கி கணக்கில் 01.05.2016 முதல் 30.08.2016 வரை உள்ள பணப்பறிமாற்ற விபரம் கேட்டு கோரிக்கை மனு கிடைக்கப்பெற்றது. அந்த மனு **அ.சா.ஆ.** 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கடிதத்தின் அடிப்படையில் வங்கி கணக்கு அறிக்கையை பார்வையிட்டு வங்கி கணக்கு எண். 33556308213 K.R. சபீனா என்ற பெயரிலும், 82/c 13 1st Cross Street, Sriram Nagar, Bothanoor, Coimbator,என்ற முகவரியைச் சேர்ந்ததாகும். 01.05.2016 முதல் 30.08.2016 வரையிலான பணப்பரிவர்த்தனையை எங்களது வங்கி பதிவேடுகளின் அடிப்படையில் பார்வையிட்டு 1 முதல் 3 வரையிலான பக்கங்கள் கொண்ட அறிக்கையை அனுப்பினேன். அது **அ.சா.ஆ.**11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திரு. ராஜேஷ்வர் பணி உயர்வு பெற்று வெளிமாநிலத்தில் பணிபுரிந்து வருவதால் மேற்படி வழக்கு தொடர்பாக மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் விசாரணை மற்றும் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்களது வங்கியில் இருந்து நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வங்கி முத்திரையுடன் அனுப்பப்பட்ட கடிதம் **அ.சா.ஆ.**12 ஆக குறீயீடு செய்யப்படுகிறது. மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்கு தொடர்பாக விபரங்களைத்தெரிவித்தார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி**

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் கு.வி இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her as true and correct.

Sd. K. Karthik

Judicial Magistrate No:II (FAC)
Dindigul

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

Calendar .
Miscellaneous CC 345 / 2018
Preliminary Register :
Sessions Prosecution witness PW - 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவிக்குமார் த/பெ. மாரிமுத்து | Calling | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Religion | : | |
| Age | : | 43/2021 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2021

**<u>மு.வி</u>**

நான் தற்சமயம் கோயமுத்தூர் ஆக்சிஸ் வங்கி கிளையில் வட்ட மேலாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017- 2018 ம் ஆண்டில் திண்டுக்கல் சாலைரோடு மெயின் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது கடந்த 06.11.2017 தேதியிடப்பட்ட மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளரிடமிருந்து வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண்.26/2017 வழக்கில் சம்மந்தப்பட்ட ஆக்சிஸ் வங்கி , திண்டுக்கல் சாலைரோடு கிளை வங்கி கணக்கு எண். 911010056477436 மேற்படி வங்கி கணக்கு யாருடைய பெயரில் எந்த விலாசத்தில் உள்ளது என்றும், மேற்படி வங்கி கணக்கில் 01.05.2016 முதல் 30.05.2016 வரை உள்ள பணப்பறிமாற்ற விபரம் கேட்டு கோரிக்கை மனு கிடைக்கப்பெற்றது. அந்த மனு **அ.சா.ஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கடிதத்தின் அடிப்படையில் வங்கி கணக்கு அறிக்கையை பார்வையிட்டு வங்கி கணக்கு எண். 911010056477436 சேமிப்பு வங்கி கணக்கு ஆகும். அது மோகன் சிவராஜா என்ற பெயரிலும், 1205, ஹவுசிங்போர்டு காலனி, KTC நகர், 7 வது தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரியைச் சேர்ந்தது ஆகும். அந்த வங்கி கணக்கின்படி 01.05.2016 முதல் 30.05.2016 வரையிலான பணப்பரிவர்த்தனையை எங்களது வங்கி பதிவேடுகளின் அடிப்படையில் பார்வையிட்டு 1 பக்கம் கொண்ட அறிக்கையை வங்கி முத்திரையுடன் அனுப்பினேன். அது **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆக்சிஸ் வங்கியிலிருந்து நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அனுமதி கடிதம் **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது இது தொடர்பாக மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி</u>**

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் கு.வி இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her as true and correct.

Sd. K. Karthik

Judicial Magistrate No:II (FAC)
Dindigul

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL**

Calendar .
Miscellaneous CC 345 / 2018
Preliminary Register :
Sessions Prosecution witness PW - 12
Name : விஜயலெட்சுமி Calling :
Village : Taluk :
Caste : Religion :
Age : 35 /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2021

**<u>மு.வி</u>**

நான் தற்சமயம் திண்டுக்கல் மாவட்ட வணிகவியல் குற்ற புலனாய்வு பிரிவில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.11.2017 ம் தேதி திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவில் சார்பு ஆய்வாளாராகப் பணியில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட G3/SP/25264/1592/2017 புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண். 26/2017 சட்டப்பிரிவு 120(பி), 406,420,294(பி), 506(1) இதச வாக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் தன்மையை கருத்தில் கொண்டும் எனது புலன் விசாரணைக்காக வழக்கினை ஆராய்ந்து அன்றையதினமே புகார்தாரர் அப்துல்ஜாபர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடிச் சென்றபோது அவரது ஊரான கோயமுத்துார் சென்று பார்த்தபோது அவரது வீட்டின் அருகே 1 வது எதிரியை 24.11.2017 காலை 9.00 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவலுடன் திண்டுக்கல் குற்றப்பிரிவு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்ததில் அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் தர சம்மத்திததின் பேரில் சாட்சிகள் கார்த்திக் மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெற்றேன். பின்பு 1 வது எதிரியை அன்றையதினமே நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். வழக்கின் எதிரி மற்றும் புகார்தாரருக்கு இடையே பணப்பரிமாற்றம் செய்த வங்கி கணக்குகள் சம்மந்தமாக KVB திண்டுக்கல் மெயின் கிளையில் உள்ள 3 கணக்குகள் தொடர்பாகவும், திண்டுக்கல் SBI வங்கியில் உள்ள 1 கணக்கு பரிவர்த்தனை தொடர்பாகவும், திண்டுக்கல் ஆக்சிஸ் வங்கி கணக்கு 1 பரிவர்த்தனை தொடர்பாகவும், திண்டுக்கல் IOB வங்கி கணக்கு 1 பரிவர்த்தனை தொடர்பாகவும் அதன் வங்கி Account Holder மற்றும் முகவரி மற்றும் குறிப்பிட்ட கால வங்கி பரிவர்த்தனைகள் தொடர்பாக விபரம் கேட்டு சம்மந்தப்பட்ட வங்கி

மேலாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அந்த கடிதம் **அ.சா.ஆ. 16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. IOB வங்கி மேலாளரிடமிருந்து பெறப்பட்ட வங்கி பரிவர்த்தனை அறிக்கை 1 முதல் 2 பக்கங்கள் **அ.சா.ஆ. 17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிபட்டியலில் உள்ள 4 முதல் 9 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்நிலையில் 2 ம்எதிரியை மாவட்ட நீதிமன்றத்தில் முன் பினை பெற்றுச் சென்றுள்ளார். பின்பு வாதியை எதிரிகள் மோசடி செய்து ஏமாற்றிய தொகை ரூ. 14,84,000/- ஆகும். பின்பு எதிரிகள் வாதியை அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததற்காகவும், வழக்கின் கோப்புகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சிகளின் விசாரணை அடிப்படையிலும் எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 120(பி), 406,420,294(பி), 506(1) இதசன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து 07.12.2017 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் கு.வி**

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் கு.வி இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me in Open Court read over to the witness in the presence of the accused, interpreted to him/her in tamil and admitted him/her as true and correct.

Sd. K. Karthik

Judicial Magistrate No:II (FAC)
Dindigul